**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>**

**<u>CC No.1/2022</u>**

எதிரி ஆஜர். நாள் – 27.02.2026

அ.சா.– 1 திரு. மன்னன் த/பெ. நீலகண்டன், செங்கல்பட்டு

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

2020 ஜீலை கொரோனா தீவரமாக பரவிய காலகட்டம் என்றால் சரிதான். கொரோனா காலத்தில் நானும், எனது மனைவியும் எங்கிருந்து எதிரியை பார்ப்பதற்கு எந்த இடத்திற்கு சென்றோம் என்று கேட்டால் செங்கல்பட்டிலிருந்து எதிரியின் வீட்டிற்கு சென்று நான் மட்டும் பார்த்தேன் எனது மனைவி வரவில்லை. நான் எதிரிக்கு கொடுத்த பணத்தைவிட எதிரி அதிகமாக திருப்பி பணத்தை கொடுத்ததற்கான ஆவண ஆதாரங்கள் எதிரியிடம் உள்ளது என்று சொன்னால் இருக்கலாம். எதிரி அவருடைய மனைவி மற்றும் தம்பியின் மருத்துவ செலவிற்காக அடிக்கடி பணம் வாங்குவார் அதை வங்கி மூலமாகவும், காசோலை மூலமாகவும், நேரடியாகவும் செலுத்துவார். இந்த வழக்கு காசோலைக்கு பிறகு எந்த பணமும் செலுத்தவில்லை.

நானும், எனது மனைவியும் அரசு பணியாளர்கள் என்று சொன்னால் சரிதான். நான் வட்டிக்கு பணம் கொடுப்பதற்கு அரசாங்கத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் யாருக்கும் பணம் கொடுக்கவில்லை எதிரிக்கு மட்டும் தான் பணம் கொடுத்துள்ளேன். எதிரியின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.